**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு - ஊடக வெளியீடு**

**(First International Research Conference on Education – Media Release)**

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாவை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின்படிப்புகள் பீடமும் கலைப்பீடத்தின் கல்வியியல்துறையும் இணைந்து முன்னெடுக்கும் முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாடு - 2024 (First International Research Conference on Education-2024), ஏப்பிரல் 20 மற்றும் 21ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிவக்கொழுந்து சிறீசற்குணராசா தலைமையில் நடைபெறும்.

- **நாளையை வலுவூட்டல்: வட இலங்கை கல்வியின் உள்ளீடுகளும் போக்குகளும் (Empowering Tomorrow : Trends and Insights of Education in Northern Sri Lanka)** என்ற தலைப்பில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்த கல்வியியல் ஆய்வு மாநாட்டில் பின்வரும் உபதலைப்புக்களில் விரிவாக்கப்பட்ட ஆய்வுச்சுருக்கங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.
  - கல்வி அளவீடும் மதிப்பீடும் (Educational Assessment and Evaluation)
  - கல்வி வழிகாட்டலும் சீர்மியமும் (Educational Guidance and Counseling)
  - மாணவர்களின் உளசமூகநலன் (Psychological Wellbeing of Students)
  - செயற்கை நுண்ணறிவும் இயந்திரவழிகற்றலும் (Artificial Intelligence and Machine Learning)
  - கல்வித் தலைமைத்துவமும் ஆளுகையும் (Educational Leadership and Governance)
  - ஆசிரியர் கல்வி (Teacher Education)
  - மனவெழுச்சி மற்றும் பன்நுண்மதி (Emotional and Multiple intelligence)
  - விசேட மற்றும் உள்ளடங்கல் கல்வி (Special and Inclusive Education)
  - அழகியல் கல்வி (Aesthetic Education)
  - கல்வியில் அரச மற்றும் தனியார் கூட்டிணைவு (Public and Private Partnership in Education)
  - ஆரம்ப பிள்ளைக் கல்வி (Early Childhood Education)
  - வளர்ந்தோர் கல்வியும் வாழ்க்கை நீடித்த கல்வியும் (Adult Education and Lifelong Education)
  - நெருக்கடியான சூழ்நிலைகளில் கல்வி (Education in crisis situations)
  - கற்றல் முறைகள் (Modes and Methods of Learning)
  - STEM மற்றும் STEAM கல்வி
- ஆய்வு மாநாட்டுக்கு 100 விரிவாக்கப்பட்ட ஆய்வுச்சுருக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டின் பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான விரிவாக்கப்பட்ட ஆய்வுச்சுருக்கங்கள், ஆய்வு மாநாட்டின் தொழில்நுட்ப அமர்வுகளில் (Technical Sessions) ஆய்வாளர்களால் முன்வைக்கப்படும்.
- ஏப்ரல் 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் ஆரம்ப அமர்வில் (Plenary Session) ஆதாரசுருதி உரையை (Keynote Speech) கொழும்புப் பல்கலைக்கழக கல்வி உளவியல் இருக்கைப் பேராசிரியர். மஞ்சுளா விதானபத்திரான ‘Research Based Innovations for Professional

Empowerment: A Strategic Approach towards Co-Developing Teacher Education in Northern Sri Lanka' என்ற தலைப்பில் முன்வைக்கவுள்ளார்.

- ஏப்ரல் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் கருப்பொருள் கருத்தரங்கு (Theme Seminar) பட்டப்பின்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர். செ.கண்ணதாசன் தலைமையில் நடைபெறும். இதில் நான்கு துறைசார் நிபுணர்கள் பின்வரும் நான்கு தலைப்புக்களில் உரையாற்றுகின்றனர்.
    - பேராசிரியர். தே.முகுந்தன் Formalising Early Childhood Education in Sri Lanka: Challenges and Issues என்ற தலைப்பில் உரையாற்றுகின்றார்.
    - உளமருத்துவர் எஸ். சிவதாஸ் Contemporary Psycho-Social Scenario of Education in Northern Province என்ற தலைப்பில் உரையாற்றுகின்றார்.
    - பேராசிரியர். F.M.நவாஸ்தீன் Existing challenges and Emerging Trends in the School Curriculum of Sri Lanka என்ற தலைப்பில் உரையாற்றுகின்றார்.
    - நீதிபதி. J.B.A.றஞ்சித்குமார் Need for Educational Research to Inform legal Decision என்ற தலைப்பில் உரையாற்றுகின்றார்.

- ஏப்ரல் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் காலை அமர்வில் ஆதாரசுருதி உரையை (Keynote speech) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வியியல்துறைத் தலைவர் பேராசிரியர். கு.சின்னப்பன் முன்வைக்கவுள்ளார்.
- ஏப்ரல் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் கலந்துரையாடல் அரங்கு (Discussion Forum) கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர். சி.ரகுராம் தலைமையில் நடைபெறும். **நாளையை வலுவூட்டல்: வட இலங்கை கல்வியின் உள்ளீடுகளும் போக்குகளும் (Empowering Tomorrow : Trends and Insights of Education in Northern Sri Lanka)** என்ற ஆய்வு மாநாட்டுத் தலைப்பில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இந்த கலந்துரையாடல் அரங்கில் வட இலங்கை கல்வியின் சமகால பிரச்சனைகள் தொடர்பாக கல்வியின் பல்வேறு துறைகளிலும் இருந்து அழைக்கப்பட்ட பேச்சாளர்கள் தமது கருத்துக்களை முன்வைப்பர். தொடர்ந்து சபையோரும் கலந்துகொள்ளும் கலந்துரையாடல் நடைபெறும். இந்த கலந்துரையாடல் அரங்கின் (Discussion Forum) வெளியீடு (Outcome) பின்னர் கொள்கை ஆவணமாக (Policy Document) முன்வைக்கப்படும்.
- ஆய்வு மாநாட்டின் தொழில்நுட்ப அமர்வுகள் (Technical Sessions) ஏப்ரல் 20 மற்றும் 21ஆம் திகதிகளில், மாலை அமர்வுகளாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் நடைபெறும்.
- இலங்கையின் பொதுக்கல்வியின் பங்குதாரர்கள், ஆய்வாளர்கள் மற்றும் கல்விச்சமூகத்தினரை **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்** முதலாவது சர்வதேச கல்வியியல் ஆய்வு மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.